# திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள்




வெளியீடு :

பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,


கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்

இளைஞர் விவகார அமைச்சு,

வடக்கு மாகாணம்.

2019

# திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள்




தொகுப்பாசிரியர்கள்
**பேராசிரியர் அ.சண்முகதாஸ்,**
**முனைவர் ச.மனோன்மணி,**
**சைவப்புலவர் கு.றஜீபன்**

**30.08.2019**

தலைப்பு: திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள்

தொகுப்பாசிரியர்கள்: பேராசிரியர் அ.சண்முகதாஸ்
முனைவர் ச.மனோன்மணி
சைவப்புலவர் கு.றஜீபன்

பதிப்பு: முதற்பதிப்பு - 2019

பக்கங்கள்: 220 + iix

பிரதிகள்: 1000

வெளியீடு: பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.

அச்சுப்பதிப்பு: எவகிறீன் அச்சகம்,
இல.693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 9893

ISBN: 978-955-7331-15-7

Title : Tirukkural Ayvuk Kaiyeetu
(A Hand book for Tirukkural Research)

Compiler : Professor A.Sanmugathas
Dr. S.Manonmani
Saivappulavar K.Rajeepan

Copyright : Dept of Cultural affairs,
Northern Province.

Edition : First Edition - 2019

Copies : 1000

Pages : 220 + iix

Published by: Dept of Cultural affairs,
Ministry of Education,
Cultural affairs, Sports and Youth affairs,
Northern Province.

Printed at: Evergreen Printers,
693, K.K.S. Road, Jaffna.
Tel. 021 221 9893

ISBN: 978-955-7331-15-7

# திருக்குறளின் தத்துவத்தளம் குறித்த விசாரணையில் அறிவாராய்ச்சியியலின் பயில்நிலை

ச. முகுந்தன்
முதுநிலை விரிவுரையாளர்
இந்துக்கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அறிவென உரிமைகோரப்படும் விடயங்களின் ஏற்புடைமை பற்றிய ஆய்வே அறிவாராய்ச்சியியல் ஆகும்.ஞானத்தின் மீது நாட்டமுள்ள புலமாகிய மெய்யியலின் அடித்தளமாக விளங்குவது அறிவாராய்ச்சியியலே எனில் அது மிகையில்லை.

அறிவாராய்ச்சியியல் என்ற சொல்லானது ஆங்கிலத்தில் "Epistemology" என வழங்குகிறது. இது Episteme + Logos என்ற இரு கிரேக்கச் சொற்களின் இணைப்பால் உருவானதாகும். அறிவு தொடர்பான முறைமை பற்றிய அல்லது முறைமைக்குட்படுத்தப்பட்ட ஆராய்ச்சி என்பதே இதன் கருத்தாகும்.

அந்தவகையில் அறிவின் தோற்றம், இயல்பு, உண்மை, வரம்பு ஆகியவை குறித்து இப்புலமானது கவனம் செலுத்துகிறது. மேலைத்தேய மெய்யியல் மரபுகளில் அறிவின் ஊற்றுப் பற்றிய ஆய்வுகள் அறிவாராய்ச்சியியலிலும் அதன் நியாயித்தல் முறைமைகள் அளவையியலிலும் உள்ளடக்கப்படுகின்றன. இந்திய மெய்யியல் மரபிலோ இவ்விரு கிளைகளும் ஒருங்கிசைவுற்றே வளர்ச்சி பெற்று வந்துள்ளன. மேலும், அறிவு அறிவுக்காகவே என்ற போக்கில் இந்தியமெய்யியல் மரபு ஆய்வு செய்வதில்லை. ஆன்ம விசாரணையை முதன்மைப்படுத்தியதாகவே இந்திய அறிவாராய்ச்சியியல் திகழ்கிறது.

## திருக்குறளும் அறிவாராய்ச்சியியலும்:

திருக்குறள் அடிப்படையில் தத்துவப் பனுவல் அன்று; தர்க்க சாஸ்திரமும் அன்று. இலக்கணமும் இலக்கிய ஞானமும் கைவரப்பெற்ற திருவள்ளுவர் தத்துவ ஞானத்தின் வேராகிய அறிவாராய்ச்சியியலை உணர்ந்தவராய் இருப்பாரா? திருக்குறளை இலக்கியம் என்ற நோக்குகைக்கு அப்பால் வெவ்வேறு ஆய்வுக் கோணங்களில் கட்டுடைத்து

நோக்குதல் விபரீதமானதா? என்ற ஆசங்கைகளும் எழாமலில்லை.

திருவள்ளுவர் தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளுக்கு அப்பாலும் அகன்றாழ்ந்தவர். சமஸ்கிருத காவிய மரபுகளையும், ஸ்மிருதிகளை யும், அர்த்த சாஸ்திரத்தையும் குறுகத் தறித்தவர். வாத்சாயனரையும் கரைகண்டவர். தான் பெற்றிருந்த பல்துறைப் புலமையினைப் பொருத்த மான சந்தர்ப்பங்களில் தனது பனுவலில் இழையோடவிட்டவர். இவ் வகையில் தர்க்கசாஸ்திர அறிவு இவருக்கு அந்நியமானதாய் இருக்க இயலாது.

அறிவாராய்ச்சியியல் தொடர்பாக குறட்பாக்களுள்ளே ஆழ்ந்து செல்ல வசதியாக இரண்டு விவாதப் புள்ளிகள் முன்வைக்கப்படுகின்றன.

**விவாதப்புள்ளி- 1**

**உண்மை பற்றிய அறிவு தொடர்பாக இந்திய அறிவாராய்ச்சியியல் மரபில் பரஞானம், அபரஞானம் என்ற இரண்டு அறிவுத் தளங்கள் ஆராயப்பட்டுள்ளன.**

திருவள்ளுவரும் இதுபற்றிக் கவனம் செலுத்தியுள்ளார்.

**ஆதாரம்**

அறத்துப்பாலின் 36வது அதிகாரம் "மெய் உணர்த்தல்" என்பதாகும்.

பொருட்பாலின் 43வது அதிகாரம் "அறிவுடமை" என்பதாகும்.

**விளக்கம்**

இவ்விரண்டு அதிகாரங்களும் அறிவு பற்றியே ஆராய்ந்துள்ளன. "அறிவு" என்ற சொல்லுடன் நிறைவுறுகின்ற குறட்பாக்களும் இவ்வதி காரங்களில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறாயின் இது "கூறியது கூறல்" என்ற குற்றத்தின் பாற்பட்டதா? எனில் இல்லையென்றே கூற வேண்டும். ஏனெனில் அறிவுடைமை என்ற அதிகாரம் பொருட்பாலில் அமைவது. இதில் பேசப்பட்ட அறிவு கருவிநிலைப்பட்டது. அஃது உலகியலறிவாகிய அபரஞானம் ஆகும்.

அறத்துப்பாலில் இடம்பெற்றுள்ள "மெய்யுணர்தல்" என்ற அதிகாரம் பரஞானத்தினை நோக்கிய பயணிப்பாகும். இவ்வதிகாரம் "துறவு" என்ற அதிகாரத்திற்கு அடுத்ததாக வைக்கப்பட்டிருப்பதும் நோக்கற்பாலது. "பர ஞானம்" கருவி நிலைப்பட்டதன்று. எமது அறிகருவிகள் மூலம் அறியக் கூடியதுமன்று. அது உணரப்படவேண்டியது. அபரஞானத்திற்குரிய அறி வுப்புலங்கள் யாவும் மாற்றத்திற்குட்படக்கூடியவை. பொய்ப்பிக்கப்படக்

கூடியவை. ஆகவே அவற்றை “மெய்“ என்றழைத்தல் தவறாகும். ஏனெனில் “உண்மை“ என்றைக்கும் மாற்றத்திற்குட்படாதது. இதனைக் கருத்தில் இருத்தியே “மெய்யுணர்தல்“ என்ற அதிகாரம் வள்ளுவரால் அமைக்கப்பட்டதெனலாம்.

**விவாதப்புள்ளி -2**

**பிரமாணங்கள் பற்றிய விளக்கமும், பயில்நிலையும் திருக்குறளின் பொருட்புலப்பாட்டு நுட்பங்களில் நன்கு இழையோடியுள்ளன.**

இதனை, பரிமேலழகரும் பல சந்தர்ப்பங்களில் தனது உரை விளக்கத்தில் உறுதி செய்துள்ளார்.

**ஆதாரம்**

அமைச்சர்களுக்கு இருக்கவேண்டிய இன்றியமையாத தகுதிப்பாடாக பிரமாணங்கள் பற்றிய அறிவு அமைவதாகத் திருவள்ளுவர் கருதியுள் ளமை, - பொருட்பால் “அமைச்சு“ (அதிகாரம்) குறள். 725, இது பற்றிய பரிமேலழகர் நிலைப்பாடு.

**விளக்கம்**

“The commentator Parimelalakar while interpreting the contents at the first three Sources of knowledge viz. perception, inference verbal testimony to highlight the master mind of Tiruvalluvar according to him Tiruvalluvar anticipated the cabinet ministers to be equipped with epistemological knowledge.” 2

என்ற பேராசிரியர் சோ. ந. கந்தசாமியின் கருத்தும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது.

இனிச் சற்று ஆழ்ந்தகன்று செல்ல முற்படலாம்.

**பொருட்பால்**

பிரபஞ்ச இயற்கையின் இயல்புகளைப் புறவயமாக ஆய்ந்துணர முற் படுவனவும், இயற்கையில் ஒரு உயிர்ச்சுவடாய் மனிதன் வாழ்வதற்கு உதவுகின்ற கருவிநிலைப்பட்ட அறிவுப்புலங்களும் இந்து மெய்யியற் புலத்தில் அபரஞானமாகக் கருதப்படுகின்றன. இயற்கை விஞ்ஞானங் களும் இன்னபிற சாஸ்திரஞானங்களும் இதில் உள்ளடக்கம்.

பிரபஞ்ச இயற்கை பஞ்சபூதக் கலப்பாலுருவானதாகும். இதனை அறிந்து கொள்ள ஞானேந்திரியங்களும், அந்தக்கரணங்களும் எமக்குத் தரப்பட்டுள்ளன. இக்கருவிக் கூட்டங்களின் துணைகொண்டு ஒருவனால் அறியப்படக்கூடிய அபரஞானத்தின் அதி உச்ச எல்லை என்பது பஞ்சபூதங்

களின் சூக்கும நிலையாகிய தன்மாத்திரைகள் தொடர்பானதாகவே இருக்க முடியும்.

தன்மாத்திரைகளானவை : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

இந்நிலைப்பாட்டையே சாங்கியம் முதற்கொண்டு சைவசித்தாந்தம் வரையிலான பெரும்பான்மையான ஆஸ்தீக தத்துவ மரபுகள் கொண்டுள்ளன.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின்
வகை தெரிவான் கட்கே உலகு (குறள் 27)
என்ற திருக்குறளும் இதே நிலைப்பாட்டையே எடுத்துரைத்துள்ளது.

"இத்தன்மாத்திரைகள் ஐந்தினதும் கூறுபாட்டையும் ஆராய்வான் அறிவின் கண்ணதே உலகம். அவற்றின் கூறுபாடாவன..... இவையல்லது உலகெனப் பிறிதொன்றில்லையென உலகின் துண்மையறிதலின் அவனறிவின் கண்ணதாயிற்று" 3

என்ற பரிமேலழகரின் விளக்கமும் இக்கருத்தை மேலும் அரண்செய்யும் விதத்தில் அமைந்துள்ளது.

**உலகியல் ஞானம்**

அபரஞானத்துள் இதுவும் அடக்கம். சிந்திக்கும் விலங்காகிய மனிதன் ஒரு சமூகப் பிராணியாவான். சமூகவாழ்வில் செவ்வனே ஊடாடி இடைவினை புரிவதற்கான நுட்பமே உலகியல் ஞானம் ஆகும்.

ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய மனத்திலிருந்து அறிவதாகக் கருதுகின்ற விடயங்கள் பலவற்றில் அவன் சார்ந்த சமூக பண்பாட்டுக் குழுக்கள் (குடும்பம், சகபாடிகள், இனம்) கற்பித்துத் தருகின்ற முன்னறிவுப் பிரதிமைகளின் பங்கு காத்திரமானதாகும்.

மனத்துளது போலக் காட்டி ஒருவற்கு
இனத்துளதாகும் அறிவு (குறள் 454)

நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தற்கு
இனத்தியல்பதாகும் அறிவு (குறள் 452)

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது அறைவது அறிவு (குறள் 426)

ஆகிய குறட்பாக்களில் வள்ளுவராற் சுட்டப்பட்ட அறிவு என்பது மேற்கூறிய உலக ஞானத்தையே ஆகும்.

**அறிவின் முடிவற்ற பயணம்**

அபரஞானத்தில் அடங்குகின்ற அத்தனை அறிவுப்புலங்களும் குறைபாடுடைய அறிவையே கொண்டுள்ளன. அவ்வறிவு பொய்ப்பிக்கப்படக் கூடியதும் மாற்றத்திற்கு உட்படக் கூடியதுமாகும்.

உ+ம் : "பூமி தட்டையானது"
இன்று இக்கருத்துப் பொய்பிக்கப்பட்டுவிட்டது.
"உயிரினங்கள் வாழ ஏதுவான ஒரே கோள் பூமியே"
இக்கருத்து நாளை பொய்ப்பிக்கப்படலாம்.

அந்தவகையில் அபரஞானப் புலங்களில் அறிவும் அறியாமையும் ஒன்றையொன்று சார்ந்திருப்பது புலனாகிறது.

அறிவறியாமை கடந்தவறிவானால்
அறிவறியாமை அழகியவாறே.
எனத் திருமூலர் குறிப்பால் உணர்த்தியதும் இக்கருத்தையேயாகும்.

அபரஞானத்தில் நிகழும் அறிவின் முடிவற்ற பயணத்தினைக் காமத்துப்பாலின் குறளொன்றில் வைத்து வள்ளுவர் காட்சிப்படுத்தியுள்ளார்.

அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு (குறள் 1110)

ஒவ்வொருமுறை தலைவன் தலைவியை நெருங்குகின்ற பொழுதும் அவள் பற்றி அவனிடமிருந்த "முன்னறிவு" (பட்டறிவு) பொய்ப்பிக்கப்படுகின்றதாம்.

இவ்வாறாக அறிவு பற்றிய ஆழமானதொரு கருத்தியலைக் கூட சுவையின் குறியீடாக அநாயாசமாகக் கையாள்வது திருவள்ளுவருக்கேயுரிய தனித்திறமையாகும்.

**பிரமாணங்களின் பிரயோகமும் நியாயித்தல் உத்திகளும்**

அறிவைப் பெறுவதற்கான சாதனங்களாக - வாயில்களாக பிரமாணங்களும் அதனைப் பிறருக்கு விளக்கியுரைப்பதற்கான பொறிமுறையாக நியாயித்தல் உத்திகளும் தர்க்கவியலில் இடம்பெற்றுள்ளன.

திருக்குறள் ஒரு தர்க்கசாஸ்திரம் அன்று. அது ஒரு வாழ்வியல் நூலேயாகும். எனினும் வாழ்வியற் சிந்தனைகளை எடுத்துரைப்பதற்கு திருவள்ளுவர் கையாண்ட வழிமுறைகளில் தர்க்கவியலின் தீட்சணியத்தைத் தரிசிக்க முடிகிறது.

**புலக்காட்சி அல்லது பிரத்தியட்சப்பிரமாணம்:**

புலக்காட்சி என்பது புலனனுபவத்தின் வழி பெறப்படும் அறிவாகும்.

"இந்திய மெய்யியலில் பிரத்தியக்ஷம் பற்றிய ஆய்வானது ஐந்து புறப்புலன்களுடன் மனம் ஆகிய அகப்புலனையும் இணைத்ததாகவே கொள்ளப்படுகிறது"

இவ்வாறு புலக்காட்சியின் பயில்நிலையில் மனம் சம்பந்தமுறுகின்ற காரணத்தாலேயே புலன்வழி பெறப்படும் விடயங்கள் உணர்வூட்டப் படுகின்றன.

ஐந்து புலன்களுடாகவும் பெறுகின்ற அறிவை மனத்துடன் தொடர் புபடுத்தி "ஐயவுணர்வு" எனச் சுட்டுகின்ற வள்ளுவரின் பாங்கு இங்கே கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயனின்றே
மெய் உணர்வு இல்லாதவர்க்கு (குறள் 354)

**புலக்காட்சியில் மனதின் வகிபங்கு**

புலக்காட்சியில் ஐந்து புலன் உறுப்புக்கள் நேரடியாகப் பங்கெடுப்பன போல் தோன்றினாலும் அறிவைப் பெறுவதில் - உணர்வதில் அவற்றின் வகிபங்கு முற்றிலும் புறவயமானதாகும். கண்ணாடியைப் போலக் கருவிநிலைப்பட்டதேயாகும். ஆனால் மனமோ நேரடியாகப் பங்கெடுப் பதுபோல் தோன்றுவதில்லை. ஆனால், புலக்காட்சி மூலம் பெறப்படும் அறிவில் மனதின் வகிபங்கே காத்திரமானதாகும்.

காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான் கண்டவாறு (குறள் 849)

இக்குறளில் இழையோடுகின்ற சிந்தனாமுறைமையில் மேற்கூறிய நுட்பத்தின் சாயலை உணர முடிகிறது.

**அனுமானம் / பின்வருமறிவு**

புலக்காட்சி முதலிய அளவைகளால் கண்டறியப்பட்ட விடயங்களி னைத் துணைகொண்டு புதிய விடயங்களை உய்த்துணர்தலே அனு மான அளவையின் பயில் நிலையாகும்.

"உண்மையென அறியப்பட்ட நேர்வுகளைத் தொடர்புபடுத்தி நியாயித்தல் மூலமாகப் புதிய தகவல்களைப் பெறுவதற்குப் பயன்படுத் தப்படும் பிரமாணமே அனுமானமாகும்".

யான் நோக்குங் காலை நிலன் நோக்கும், நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும். (குறள் 1094)

இக்குறளின் பொருளமைதியை யாவரும் அறிவர். ஆனால் தர்க்க நுட்பத்தில் தவறொன்றுள்ளது போலில்லையா?

தலைவியைத் தான் நோக்காதபோது குறித்த தலைவி தன்னை நோக்குவதையும், இளநகை பூப்பதையும் தலைவன் எவ்வாறு அறிந்து கொண்டான் என்பதே இவ்விடத்திலெழுகின்ற ஆசங்கையாகும். "இது காமத்துப்பாலின் கவிநயம்" என்று கண்டுபிடித்துச் சொல்வதற்கு ஆய் வாளர்கள் அவசியமில்லை.

காமத்துப்பாலின் கட்டமைப்பில் தமிழ் இலக்கண இலக்கிய வரம்பு களை மீறாத வள்ளுவர் தர்க்கவியலில் மட்டும் தவறிழைத்திருப்பாரா?

ஒரு குறளிற்கு பொருள் விரிந்துரைப்பதற்கு இரண்டு வழி முறைகளைப் பரிமேலழகர் முதற்கொண்டு உரையாசிரியர்கள் பலர் பின் பற்றியுள்ளனர்.

1. குறித்த குறளிற்கு முன்னைய அல்லது அடுத்துவரும் குறள் களின் பொருளமைதியுடன் கொண்டு கூட்டிப் பொருள் விரிப்பது.
2. குறிப்பிட்ட குறள் இடம்பெற்றுள்ள அதிகாரத்தினை அவதானித் துப் பொருள் கொள்வது.

இங்கு இந்நடைமுறை பயனளிக்கவல்லதாயுள்ளது. அந்தவகையில் "யான் நோக்கும் காலை"...... என்ற குறித்த குறளிற்கு முன்னைய குற ளையும் அதன் பொருளமைதியையும் புரிந்து கொண்டு அதன் தொடர்ச்சி யாக இக்குறளை விளங்கிக் கொள்ள முயல்வது முதலாவது வழிமுறை.

நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர் (குறள் 1093)

என்பது "யான் நோக்கும் காலை" க்கு முன்னைய குறளாகும். இதன் பொருளமைதியை நோக்கும்பொழுது தலைவி ஏலவே இவனை நோக்கியிருந்தாள் என்பதும் இவன் அவளை நோக்கியபொழுது தலை குனிந்தாள் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே அனுமானப் பிரமாணத்திற்கு அவசியான "முன்னறிவு" இங்கே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது வழிமுறையில் பொருள்கொள்ள முயலும்போது (அதி

காரத்தால்) குறித்த குறள் இடம்பெறுவது காமத்துப் பாலின் "குறிப்பறிதல்" என்ற அதிகாரத்திலேயாகும்.

குறித்த குறளின் ("யான் நோக்கும் காலை....") பொருண்மையில் உய்த்துணரப்பட வேண்டிய - குறிப்பால் உணரப்பட வேண்டிய விடய மொன்றை வள்ளுவர் இழையோடவிட்டிருப்பதும் பொருத்தமானதே யாகும்.

எனவே

01. அவள் அவனை நோக்கியபடியிருந்தாள். (முன்னைய குறள்)
02. எப்பொழுதெல்லாம் அவன் அவளை நோக்குகின்றானோ அப்பொழுதெல்லாம் விழிகளை அவள் தாழ்த்திக் கொள்கிறாள்.
03. இப்பொழுது அவன் அவளை நோக்கவில்லை.
04. எனவே, முன்னறிவின் பிரகாரம் அவன் அவளை நோக்கு வான்....

இதனைத் தலைவன் ஊகிப்பது அனுமான அளவையின் வழியே ஏற்புடையதேயாகும்.

**உவமானப் பிரமாணம்**

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று (குறள் 22)

என்ற குறளில் துறந்தாரின் "பெருமை" ஆகிய எண்ணிலிப் பெறு மதியை விளக்குவதற்கு "இறந்தவர்களின் எண்ணிக்கை" என்ற பரிச்சய மான முடிவிலிப் பெறுமதியை உவமானமாகக் கையாண்டிருப்பது நயப் புக்குரியது.

**ஆப்தவாக்கியம் / உரையளவை**

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்ற வகையில் சான்றோர் உரையினைச் சான்றுரையாகக் கொள்வதால் இவ்வளவையினை ஆப்த வாக்கியம், உரையளவை எனவும் வழங்குவர்.

அந்த வகையில் உலகத்தவரால் உண்டு என ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயத்தினை இல்லை என்று மறுப்பவனை "அலகை" (பேய்) என வள்ளுவர் விமர்சித்துள்ள பாங்கு கவனத்திற்குரியது.

உலகத்தார் உண்டென்பதில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப்படும் (குறள் 850)

லௌகீகம் - அலௌகீகம் என நியாயதரிசன வாதிகளும் வேதவாக்

கியம், உலகவாக்கியம் எனச் சைவசித்தாந்த வாதிகளும் ஆப்தவாக்கியப் பிரமாணத்தை வகைப்படுத்தியுரைப்பதும் கவனிக்கத்தக்கது. (விரிவஞ்சி விவரிக்கவில்லை)

இவ்வாறாக சுபாவம், ஒழிபு, ஐதீகம் உள்ளிட்ட அனைத்துப் (10) பிரமாணங்களின் பயில் நிலைகளையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் திருக்குறளில் அடையாளங்காட்ட முடியும். அறிவாராய்ச்சியியலில் அளவையியல் ஒரு பகுதியேயாதலின் விரிவஞ்சி அவை பற்றி விளக்க முற்படவில்லை.

பிரமாணங்களின் கையாட்சி மட்டுமன்றி தர்க்கவியலில் பயன்படுகின்ற "தூல அருந்ததி நியாயம்" முதலிய நியாயித்தல் உத்திகளும் வள்ளுவரால் ஆங்காங்கே பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**தூல அருந்ததி நியாயம்**

ஒருவருக்குத் தெரியாத விடயமொன்றைத் தெரிந்து கொள்ள வைப்பதற்கான உத்திமுறை இதுவாகும். தெரியாத விடயமொன்றை அதிகம் துலாம்பரமாக அறியப்பட்ட விடயமொன்றுடன் தொடர்புபடுத்திச் சுட்டுவதனூடாக அறிந்ததிலிருந்து அறியப்படாத விடயத்தினைப் புரிய வைத்தலே தூல அருந்ததி நியாயத்தின் பயில் நிலையாகும்.

விண்ணிலுள்ள நட்சத்திரக்கூட்டத்தில் அருந்ததியை ஒருவனுக்குக் காட்டவேண்டுமெனில்,

01. பிரசித்தமாகத் தெரிகின்ற சப்தரிஷிமண்டலத்தைச் சுட்டிக் காட்டுதல்.
02. சப்தரிஷிமண்டலத்தினுள் அதிக பிரகாசமுடைய வசிட்டர் விண் மீனைச் சுட்டிக்காட்டுதல்.
03. வசிட்டர் விண்மீனுக்கு அருகில் உள்ள பிரகாசம் குறைந்த விண்மீனே அருந்ததி எனக் காட்டுதல்.

இவ்வகை நியாயித்தல் உத்தியினை வள்ளுவரும் கையாண்டுள்ளார். எடுத்துக்காட்டு:

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (குறள் 656)

சான்றோர் பழிக்கும் செயலைப் புரிவதால் எத்தகைய பாதகம் விளையும் என்பதை உணர்த்துவதே இக்குறளின் நோக்கம். பெற்ற தாயானவள் பசியினால் துடித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கும்நிலை எவ்வளவு

கொடுமையானது என்பதனை ஒவ்வொருவரும் அறிவர். சப்தரிஷி மண்டலத்தைக் காட்டுவதுபோல இதனை முதலில் குறிப்பிட்டு, பின்னர் அதனை விடவும் பாதகமானது சான்றோர் பழிக்கும் செயலைப் புரிவது என தூல அருந்ததி நியாயம் பேசுகிறார் திருவள்ளுவர்.

**சுந்தோப சுந்த நியாயம்**

(சுந்தன் - உபசுந்தன் என இரு சமபலங்கொண்ட சகோதரர்கள் ஊர்வசியின் பொருட்டு தம்முள் சண்டையிட்டு மாய்ந்தமைபற்றி வழங் கும் பௌராணிகப் பெயரீடு இதுவாகும்) சமவலிமையுள்ள இரண்டு கார ணங்கள் ஒன்றையொன்று தாக்கி வெறுமையாகின்ற நிலைமையினை விளக்குவதற்கு இந்தியத் தர்க்கவியலில் சுந்தோப சுந்த நியாய உத்தி முறை கையாளப்படுகிறது.

திருக்குறளில் சுந்தோப சுந்த நியாயத்தின் பயில்நிலைக்கு கீழ்வரும் குறளை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

இருநோக்கு இவள் உன்கண் உள்ளது ஒரு நோக்கு
நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து (குறள் 1091)

அஃதாவது தலைவியின் ஒரு நோக்கு (பொது நோக்கு) இவனுக்கு ஏக்கத்தை உண்டுபண்ணும் நோயாகிறது. அவளின் ஒரு நோக்கு (தனி நோக்கு) இவனின் நோயைத் தீர்க்கவல்ல மருந்தாகிறது. இவையி ரண்டும் கணத்துக்குக்கணம் மாறி மாறி நிகழ்வதால் சுந்தனும், உபசுந் தனும் தம்முள் போரிடுவதுபோல தலைவனின் உள்ளம் ஸ்தம்பித்துப் போகிறது.

இவ்வாறாகத் திருவள்ளுவர் தனது திருக்குறளில் கருத்து வெளிப் பாட்டு முறையியலுக்குத் துணை செய்பவையாக அளவைப் பிரமாணங் களையும், நியாயித்தல் உத்திகளையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பாலது.

அப்பிரமாணம் - ஏற்கப்பட முடியாத அறிவு
இது ஏற்புடை அறிவிற்கு நேர்முரணானது.

இதனை ஐயம் (சம்சயம்), பிழை (விபஉபாயம்) போன்றவற்றினூடாக தத்துவாதிகள் இனங்காட்டியுள்ளனர்.

உண்மை பற்றிய தேடலே ஐயத்தை மனிதர்களிடத்தில் உண்டாக்கு கிறது. நிச்சயமற்ற அல்லது ஐயத்திற்கு இடமளிப்பதாயுள்ள பிரச்சினை களே அறிவாராய்ச்சிக்கு அடிப்படையாகவும் அமைந்து விடுகின்றன.

திருக்குறளில் இடம்பெறும்,

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு (குறள் 353)
ஐயப்படாது அகத்தது உணர்வானை (குறள் 702)
மாசறு காட்சியர் (குறள் 352)
புன்மையில் காட்சியர்.

ஆகிய சொற்பிரயோகங்களும் இவைபற்றிய பரிமேலழகரின் உரை விளக்கங்களும் திருவள்ளுவரின் அறிவாராய்ச்சியியற் புலமையினைத் தெளிவுபடுத்துவனவாய் அமைந்துள்ளன.

**பரஞானம்**

அபரஞானத்தைப் போலன்றி பரஞானம் பூரணமானது. மாறுதலுக்கு உட்படாதது; குறைபாடற்றது. இதுவே பிரம்மஞானம் அல்லது பரம் பொருள் பற்றிய அறிவு ஆகும். அறிவுத்துறைகளுக்கெல்லாம் ஊற்றான - மூலமான அறிவு என்பதனால் “அடிநிலை அறிவு“ என்றும் அழைக்கப்படுகிறது.

திருக்குறளில் “மெய்யுணர்தல்” என்ற அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பத்துக் குறள்களும் பரஞானத்துடன் தொடர்புடைய விடயங்களைப் பேசியுள்ளன. அந்தவகையில் இவ்வதிகாரத்தின் முதல் நான்கு குறட்பாக்களும் அபரஞானத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. (பார்க்க - மெய்யுணர்தல் 1 - 4) இவ்வதிகாரத்தின் ஐந்தாவது குறள் மெய்யுணர்வின் இலக்கணம் பற்றிக் குறிப்பிடுகிறது.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு (குறள் 355)
இக்குறளிற்குப் பரிமேலழகர் உரை பின்வருமாறு அமைகிறது.

“இந்தப் பிரபஞ்சத்தினை நிலம்முதல் உயிரீறாகிய தத்துவங்களின் தொகுதியென உணர்ந்து அவற்றை நிலமுதலாகத் தத்தங் கரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்றால் காரண காரியங்கள் இரண்டுமின்றி முடிவாய் (ஒரு பொருள்) நிற்பதனையுணர்த்தலாம். இதனால் மெய்யுணர்தலின் இலக்கணம் கூறப்பட்டது”

இதுவே பரஞானமாகிய அடிநிலையறிவாகும். பரஞானம் பற்றிய டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணனின் கீழ்வரும் கூற்று இவ்விடத்தில் பொருத்தங்கருதித் தரப்படுகிறது.

“உயரிய ஞானம் அல்லது பரஞானம் அறியாதனவெல்லாம் அறியச்

செய்வது. இது அடிநிலை அறிவு என்று விளக்கம் பெறுகிறது. மண்ணால் செய்த ஒரு பொருளை அறிந்தால் களிமண்ணால் செய்யப்பெற்ற பொருட்கள் அனைத்தையும் நாம் அறிய முடியும். களிமண் பெறும் மாறுபட்ட உருவங்கள் பெயர்களினால் பிரித்தறியப் பெறுகின்றன. ஆனால் மூலப் பொருள் (களிமண்) ஒன்றேயாகும். இதனைப் போன்றதே அடிநிலை அறிவு பற்றிய போதனையும், அனைத்தையும் அறிவிக்கும். இது அந்த முழுமுதலான பரவான்மாவை அறிவதாகும்"

இவ்வாறாக எல்லா அறிவுப்புலங்களின் விரிவுக்கும் அடிநிலைக் காரணமாகிய அந்த மூலப்பொருளை - பரம்பொருளை - மெய்ப் பொருளை "மெய்யுணர்தல்" என்ற அதிகாரத்தில் வைத்துச் - செம்பொருள் எனத் திருவள்ளுவர் சிறப்பித்துப் பேசுகிறார்.

செம்பொருள் காண்பதறிவு (குறள் 358)

“The meta physical intellectuals are celebrated as 'cemporul kantar, meypporul kantar'.......... etc Thirukkural. They respectively denote the mystics who envisioned the perfect and absolute reality.”

**செம்பொருளாகிய பரஞானத்தை உணர்தலின் சாத்தியப்பாடு**

ஆன்மாக்கள் தமக்குள்ள இயல்பான அறிவினால் பரஞானத்தை அறிவது நேரடியாகச் சாத்தியமற்றதாகும். ஏனெனில் அவை கொண்டுள்ள அறிவைப் பெறுவதற்கான கருவிகள் குறைபாடுடையவை; வரையறைக்குட்பட்டவை.

எனவே, பரஞானத்தை நோக்கிய பயணிப்புக்கு ஞானகுருவின் வழிகாட்டல் அவசியமாகிறது. உலக ஞானத்தை உபதேசிக்கும் உபாத்தியாயனைப் போலன்றி பரஞானத்திற்கான பாதைகாட்டியாக விளங்கும் ஞானகுருவை பரப்பிரம்மமாகவே இந்துப் பனுவல்கள் கருதுவதற்கான காரணமும் இதுவேயாகும்.

குரு ஷாட்ஷாத் பரப்பிரம்மம் (குருகீதை)

இவ்வாறாக ஞானகுருவின் துணையுடன் மெய்ப்பொருளை உணர்வதற்கு

கேட்டல் → சிந்தித்தல் → தெளிதல் → நிட்டை கூடல்

(சிரவணம்), (மனனம்), (நிருத்தியாசனம்) ஆகிய படிநிலைகளை இந்து தத்துவ சாஸ்திரங்கள் அறிமுகஞ் செய்துள்ளன.

மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் செம்பொருளை எய்துவதற்கான

படிநிலைகளாக திருவள்ளுவரும் இவற்றையே வலியுறுத்தியுள்ளார்.

பரிமேலழகரும் இவற்றை மிகவும் வெளிப்படையாகத் தனது உரையில் விளக்கியுள்ளார்.

"செம்பொருள் காண்பதறிவு" என்று நிறைவெய்தும் குறளிற்கு முன்னுள்ள இரண்டு குறள்களிலும் முற்குறிப்பிட்ட சிரவணம் முதலிய படிநிலைகள் வள்ளுவரால் எடுத்தாளப்பட்டுள்ளமையும் நயக்கத்தக்கது. அக்குறள்கள் பின்வருமாறு :

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி (குறள் 356)
ஓர்த்துள்ளம் உள்ளதுணரின் ஒருதலையாய்
பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு (குறள் 357)

இவ்விரண்டுள் முதலாவது குறள் (கற்றீண்டு.....) ஞானகுருவின் துணையுடன் நிகழும் கேட்டல், சிந்தித்தல் ஆகிய படிநிலைகளைக் குறிப்பால் உணர்த்தியுள்ளது.

இம்மக்கட் பிறப்பின் கண்ணே உபதேச மொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு அதனான் மெய்ப்பொருளை உணர்ந்தவர்..........[11]

எனக் குறித்த அக்குறளிற்கு பரிமேலழகர் வழங்கிய உரையும் இக்கருத்தை மேலும் தெளிவுபடுத்தியுள்ளது.

இரண்டாவது குறளின் முதலாவது அடியில் திருவள்ளுவர் "தெளிதல்" என்ற பரஞானத்திற்கான மூன்றாவது படிநிலையை வெளிப்படுத்தியுள்ளார். தெளிதல் நிகழ்ந்த மாத்திரத்தே "நிட்டைகூடல்" நிகழ்ந்துவிடும். பரஞானம் உணரப்படுகின்றபோது பிறப்பு முதலிய லோக விகாரங்கள் அற்றுப்போய் விடுகின்றன. இதனையே குறித்த குறளின் இரண்டாவது அடி புலப்படுத்தி நிற்கிறது.

"அங்ஙனம் கேட்ட உபதேசப் பொருளை ஒருவனுள்ளம் அளவைகளாலும் பொருந்து மாற்றானுந் தெளிய ஆராய்ந்து அதனான் முதற்பொருளை உணருமாயின்...."

என இக்குறளிற்கான பரிமேலழகரின் உரையும் முதற்குறளின் பொருளமைதியுடனான தொடர்ச்சியாகவே அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

எனவே செம்பொருளாகிய பரஞானத்தினை உணர்வதற்கான படிநிலைகள் தொடர்பாகத் திருக்குறள் முன்வைத்துள்ள சிந்தனைகள் இந்து மெய்யியல் மரபின் வழிவந்தவையாகவே அமைந்து கிடக்கின் றமை நோக்கற்பாலது.

**குறிப்பு :**

"ஓர்த்துள்ளம் உள்ளத்துணரின்..." என்ற முற்கூறிய குறளிற்கு தரப்பட்ட பரிமேலழகரின் உரைப்பகுதியில் "அளவைகள்" பற்றி வலி யுறுத்தப்பட்டிருப்பதனைக் கவனிக்கவும். பரஞானத்திற்கான படிநிலை யிற்கூட அளவைகளின் பிரயோகத்தினைப் பரிமேலழகர் புறந்தள்ள வில்லை. அவ்வாறாயின் அபரஞானப் புலங்களில் "அளவைகள்" பெறவல்ல முக்கியத்துவம் பற்றிக் கூறவேண்டியதில்லை. எனவே திருக்குறளின் பொருட்புலப்பாட்டு நுட்பத்தில் அளவையியலும் அதன்வழி அறிவாராய்ச்சியியலும் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை ஊகிக்க முடியும்.

**திரிபுடி - நிலை**

அறிவாராய்ச்சியியலில் "திரிபுடி" பற்றிக் குறிப்பிடாத இந்து தத்துவப் பள்ளிகளே இல்லை எனலாம். எந்தவொரு அறிவைப் பெறுகின்ற செயன்முறையிலும்,

அறிபவன் (ஞாதுரு)
அறியப்படுபொருள் (ஞேயம்)
அறிவு (ஞானம்)
ஆகிய மூன்று கூறுகள் சம்பந்தமுறுகின்றன.

அபரஞானநிலையில் ஒத்திசைவாகத் தொழிற்படுகின்ற இம்மூன்று கூறுகளும் பரஞானத்தையுணர்கின்றபோது ஸ்தம்பிக்கின்றன. ஒரு நிலைப்படுகின்றன. பரஞானத்தை உணர்கின்ற நிலை ஏற்படுகின்ற பொழுது அறிபவன் என்றும் அறியப்படுபொருள் என்றும் அறிவு என்றும் வேறுபாடுகள் இருக்க முடியாது.

ஏனெனில், பரஞானம் பரிபூரணமானது. அதனைப் புறவயமாக உணர முடியாது. இந்நிலையில் முற்கூறிய மூன்று கூறுகளும் ஒரு நிலைப்படுகின்றன. இதுவே திரிபுடி நிலையாகும்.

பிரக்ஞானம் பிரம்மம் (ஐதரேய உபநிடதம்)
உய்வல்லார் அறிவுள் அறிவாமே (தி. மந். 2822)
ஞேயத்தை நின்றார்க்கு ஞானாதி நின்றிடும்

ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும். (தி. மந். 1606)

மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் “திரிபுடிநிலை“ பற்றித் திருவள்ளுவரும் கருத்துரைத்துள்ளார். செம்பொருளாகிய பரஞானத்தினை உணர்ந்தநிலையில் பிறப்பு நீங்கி விடுகிறது அதாவது அறிபவன் இல்லாது போகின்றான் என்ற கருத்தினையே,

பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பதறிவு (குறள் 358)

என்னும் குறள் வெளிப்படுத்தி நிற்கிறது. இக்குறளிற்கு முன்னுள்ள இரண்டு குறட்பாக்களும் இதே கருத்தை அரண்செய்திருப்பது கவனிக் கத்தக்கது.

இவ்வாறாகத் திருக்குறளில் இழையோடியுள்ள அறிவாராய்ச்சியியலுடன் தொடர்புடைய கருத்தாடல்களின் மூலமாக இக்கட்டுரை திருக்குறளின் தத்துவத்தளம் குறித்த சில முக்கிய விவாதப்புள்ளிகளை அடையாளப்படுத்த முற்படுகின்றது.

- ♦ திருக்குறள் அபரஞானம் பரஞானம் ஆகிய இருவகை அறிவுத் தளங்களையும் ஏற்றுக்கொள்கிறது.
- ♦ திருக்குறள் செம்பொருள் பற்றிய நாட்டத்தை வலியுறுத்தி யுள்ளது.
- ♦ பிரபஞ்ச இயற்கையின் தோற்றம் குறித்த ஆய்வில் சாங்கியம் முதலிய இந்துதரிசனங்களின் நிலைப்பாட்டுடன் ஒத்திசைவுற்றுள்ளது.
- ♦ பிரமாணங்கள் பற்றிய நிலைப்பாட்டில் ஆப்தவாக்கியத்தை நிராகரிக்கவில்லை மாறாக ஆப்தவாக்கியத்தை மறுப்பவரை பேய்- அலகை எனக் கடுமையாக விமர்சிக்கிறது.
- ♦ பரஞானத்தை நோக்கிய பயணிப்பில் உபநிடதங்களின் வழி வந்த சிரவணம் முதலிய படிநிலைகளை அடையாளப்படுத்தியுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. கிருஷ்ணராஜா, சோ.,(1995), சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல் ஓர் அறிமுகம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு,ப. 02.
2. Kandasamy, S.N., (2000),**Indian Epistolomogy, As Expounded in the Tamil Classics**, International Institute of Tamil Studies, Chennai, P. 04.
3. திருக்குறள் பரிமேலழகர் உரை, (1962), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, ப. 12.
4. கிருஷ்ணராஜா, சோ.,(1995), மு.கு.நூ. ப. 16.
5. மேலது, ப.25.
6. திருக்குறள் பரிமேலழகர் உரை,(1962), மு.கு.நூ.,ப.147.
7. இராதாகிருஷ்ணன்,எஸ்.,(1982), கீழை மேலைநாடுகளின் மெய்ப்பொருளியியல் வரலாறு, ப.82.
8. Kandasamy, S.N., (2000), op. cit, P.4.
9. திருக்குறள் பரிமேலழகர் உரை, (1962), மு. கு. நூ., ப.148.